


# குன்றத்தூர்வடக்கு ஒன்றியக் கழக அவசர செயற்குழுக் கூட்டம்

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

காஞ்சிபுரம், மே 25

குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.வந்தேமாதரம் அறிக்கை வருமாறு:

குன்றத்தூர் வடக்கு ஒன்றிய அவசர செயற்குழு கூட்டம் இன்று 25.05.23 வியாழக்கிழமை மாலை 04.00 மணியளவில் கோவூர் ப்ரித்தி திருமண மண்டபத்தில்

ஒன்றிய கழக அவைத்தலைவர் து.சுந்தர் அவர்கள் தலைமையில், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர்,குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் மாவட்ட ஊராட்சிக் குழுத்தலைவர், குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் படப்பை ஆ.மனோகரன், மாநில பொறியாளர் அணி துணை செயலாளர், ஆலந்தூர் தொகுதி பூத் கமிட்டி மேற்பார்வையாளர் இரா. நரேந்திரன் சிறப்புரையாற்றுகிறார்கள்.

தலைமை பொதுக்குழு உறுப்பினர்.கே.எத்திராஜ், குன்றத்தூர் வடக்கு கழக நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெறும் கூட்டத்தில், நமது ஒன்றியத்திற்குட்பட்ட , மாவட்ட, ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளை கழக செயலாளர்கள், கிளை கழக நிர்வாகிகள் இளைஞரணி, மகளிரணி, மகளிரணி அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1. கழக செயல் வீரர்கள் ஆலோசனைக் கூட்டம், 2. தமிழின தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா. 3.கழக உறுப்பினர் சேர்த்தல், 4.கழக வளர்ச்சி.

இவ்வாறு ஏ.வந்தேமாதரம் தனது அறிக்கையில் தெரிவித்து உள்ளார்.

## தமிழ்நாட்டில் மிதமான மழைக்கு வாய்ப்பு

சென்னை, மே 25-

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வெப்ப நிலை 39 டிகிரி செல்சியஸ் அளவாக இருக்கக்கூடும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழகத்தில் அடுத்த 5 நாட்களுக்கு மிதமான மழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. குறிப்பாக வரும் 26ந்தேதி வரை தமிழகத்தின் ஒரு சில பகுதிகளிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அதிக பட்ச வெப்ப நிலை 39 டிகிரி செல்சியஸ் அளவாக இருக்கக்கூடும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



கோவை வடக்கு மாவட்டம்,காரமடை கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் திராவிட மாடல் அரசின் இரண்டாண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் காரமடை கிழக்கு ஒன்றிய செயலாளர் எஸ் எம் டி கல்யாணசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் கழக துணைப் பொதுச் செயலாளரும், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ. ராசா கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் தலைமை கழக பேச்சாளர் எல். பி. தர்மலிங்கம்,கோவை வடக்கு மாவட்ட செயலாளர் ரவி, முன்னாள் எம்.எல்.ஏக்கள் சி.ஆர். ராமச்சந்திரன், ப.அருண்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் டி.ஆர்.சண்முகசுந்தரம், காரமடை நகரச் செயலாளர் வெங்கடேஷ், மேற்கு ஒன்றிய செயலாளர்சுரேந்திரன், இந்து சமய அறநிலையத்துறை கோவை மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் கவிதா கல்யாணசுந்தரம். உதயகுமார், எஸ்.பி.சரவணன். எல்.ஐ.சி. செந்தில், உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## இயற்கை வளங்களை பத்திரமாக அடுத்த தலைமுறைக்கு

# கொடுக்கும் பொறுப்பு பூமியில் வாழும் நம் ஒவ்வொருவருக்கும் உண்டு!

சென்னை, மே 25-

இந்த உலகம் உயிர் வாழ் இனங்கள் அனைத்திற்கும் சொந்தம். இயற்கை வளங்களை பத்திரமாக அடுத்த தலைமுறைக்கு கொண்டு சேர்க்கும் பொறுப்பு இந்த பூமியில் வாழும் நம் அனைவருக்கும் உள்ளதால் பொறுப்புணர்ந்து இயற்கையை நேசிப்போம் என தினகரன் நாளேடு 24.5.2023 அன்று தலையங்கம் வெளியிட்டுள்ளது.

அது வருமாறு:

வெயில் சுட்டெரிக்கும் இந்த நேரத்தில் சமீபகாலமாக வானிலை மாறி வருவதும் கவலையை ஏற்படுத்தி இருக்கிறது. உலகம் முழுவதும் தட்பவெப்ப நிலை மாறிக்கொண்டே இருக்கிறது. இப்படியே போனால் இது மனிதகுலத்திற்கு மட்டுமல்ல, பூமியில் உயிர் வாழும் அத்தனை ஜீவராசிகளுக்கும் ஆபத்தாக போய் முடியும். எனவே வானிலை, பருவ நிலை மாற்றம் குறித்து கொஞ்சமேனும் அக்கறை பட வேண்டும் என்று வானிலை ஆர்வலர்கள் அறிவுறுத்தி வருகிறார்கள்.

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கம்!

உலகம் முழுவதும் வானிலை மாற்றத்தால் கடந்த 50 ஆண்டுகளில் 20 லட்சம் பேர் பலியாகி உள்ளனர். சுவிட்சர்லாந்து நாட்டின் ஜெனீவா நகரில் நடந்த உலக வானிலை மாநாட்டில் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 50 ஆண்டுகளில் ஏற்பட்ட பல்வேறு பேரிடர்களால், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 30 சதவீதம் அளவுக்கு பொருளாதார பாதிப்புகள் ஏற்பட்டு உள்ளன.


தினகரன்
வானிலை மாற்றம்

ஆசிய நாடுகள் அதிக அளவு வானிலை பாதிப்பை எதிர்கொண்டு உள்ளன. ஆசிய நாடுகளில் மட்டும் வானிலை பாதிப்பால் கடந்த 50 ஆண்டுகளில் 10 லட்சம் பேர் பலியாகி இருக்கிறார்கள். ஆப்பிரிக்காவில், 7 லட்சத்து 33 ஆயிரத்து 585 பேர் பருவநிலை பேரிடரால் உயிரிழந்து உள்ளனர். இதில் 95 சதவீதம் வறட்சி நிலையால் ஏற்பட்டவை.

உலகம் முழுவதும் கடந்த 1970 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை வானிலை, பருவ நிலை மற்றும் நீர் தொடர்புடைய தீங்குகளால் 12 ஆயிரம் பேரிடர்கள் ஏற்பட்டு உள்ளன. இதனால், வளர்ந்து வரும் நாடுகள் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளன. இந்திய மதிப்பில் ரூ.356 லட்சம் கோடி பொருளாதார இழப்புகள் வானிலை பாதிப்பு காரணமாக உலகம் முழுவதும் ஏற்பட்டுள்ளது.

கடந்த 50 ஆண்டுகளில் உலக அளவில் 11,778 இயற்கை பேரிடர் ஏற்பட்டுள்ளது. இதில் பலியான 20 லட்சம் பேரில் 90 சதவீதம் பேர் வளரும் நாடுகளை சேர்ந்தவர்கள். கடந்த 50 ஆண்டுகளில் இந்தியாவில் மட்டும் 573 பேரிடர்கள் ஏற்பட்டு உள்ளன. அதில் 1.38 லட்சம் பேர் பலியாகி இருக்கிறார்கள். ஆசிய நாடுகளில் அதிகபட்சமாக வங்கதேசத்தில் ஏற்பட்ட 281 பேரிடர்களில் 5.20 லட்சம் பேர் பலியாகி இருக்கிறார்கள்.

இப்படி ஒவ்வொரு பேரிடர் சமயத்திலும் உயிர் பலி ஏற்படுவதை தடுக்க வானிலை மாற்றம், பருவ நிலை மாற்றம் குறித்து ஒவ்வொரு நாடுகளும் கவனம் செலுத்த வேண்டும் என்று ஐநா உள்பட பல்வேறு அமைப்புகள் வலியுறுத்தி வருகின்றன.

அதற்கான நிதியும் ஒதுக்கப்படுகிறது. ஆனால் பொறுப்பெடுத்துக்கொள்ளத்தான் யாரும் தயாராக இல்லை. நீர், நிலம், காற்று உள்ளிட்ட இயற்கை வளங்களை மாசுபடுத்தி, அழித்து வரும் ஒவ்வொரு தனிமனிதனுக்குள்ளும் மாற்றம் ஏற்பட வேண்டும். இல்லை என்றால் இயற்கை ஏதாவது ஒரு வழியில் தனது கோபத்தை காட்டிக் கொண்டு தான் இருக்கும்.

இந்த உலகம் உயிர் வாழ் இனங்கள் அனைத்திற்கும் சொந்தம். அந்த உணர்வு வேண்டும். அப்போதுதான் பயன்படுத்திய இயற்கை வளங்களை மீண்டும் அதே அளவுக்கு சேகரிக்க வேண்டிய உணர்வு வரும். குறிப்பாக நாம் பயன்படுத்தும், நமக்கு தேவைப்படும் இந்த இயற்கை வளங்களை அத்தனை பத்திரமாக அடுத்த தலைமுறைக்கு கடத்திச் சென்று கொடுக்க வேண்டிய பொறுப்பு இந்த பூமியில் வாழும் நம் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது. எனவே உரிய பொறுப்பு உணர்ந்து இயற்கையை நேசிப்போம்.

இவ்வாறு அத்தலையங்கத்தின் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பெருங்குடி வளாகத்தில்

# குப்பை கொட்டும் இடத்தை அதிகாரிகள் ஆய்வு!

சென்னை, மே 25 -

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பெருங்குடி குப்பைக் கொட்டும் வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் உயிரி அகழ்ந்தெடுத்தல் பணிகள் மற்றும் சேத்துப்பட்டில் உள்ள உயிரி எரிவாயு மையம் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.இராதாகிருஷ்ணன், நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பெருங்குடி குப்பைக் கொட்டும் வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் உயிரி அகழ்ந்தெடுத்தல் பணியினை கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ.இராதாகிருஷ்ணன், நேற்று (24.05.2023) பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் நாளொன்றுக்கு சராசரியாக 5500 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் சேகரிக்கப்படுகிறது. இந்தத் திடக்கழிவுகள் மக்கும், மக்காத கழிவுகளாக பிரிக்கப்பட்டு மறுசுழற்சி செய்யும் வகையில் பதனிடும் மையங்களுக்கு அனுப்பப்படுகிறது. மீதமுள்ள கழிவுகள் பெருங்குடி மற்றும் கொடுங்கையூரில் உள்ள குப்பைக் கொட்டும் வளாகங்களில் கொட்டப்பட்டு வருகிறது.

பெருங்குடி குப்பைக் கொட்டும் வளாகமானது 225 ஏக்கர் பரப்பளவில் உள்ளது. இதில் நீண்ட நாட்களாக கொட்டிக் கிடக்கும் குப்பை 34.02 இலட்சம் கன மீட்டர் அளவில் உள்ளது. இந்த வளாகத்தில் பல ஆண்டுகளாக கொட்டப்பட்டு வரும் குப்பைகள் தற்சமயம் உயிரி அகழ்ந்தெடுத்தல் முறையில் (Bio Mining) களையப்பட்டு அவற்றிலிருந்து கல், மணல், இரும்பு, மரக்கட்டைகள், கண்ணாடி, ரப்பர் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை தனித்தனியாக பிரித்தெடுத்து மறுசுழற்சி செய்யப்பட்டு வருகிறது. இந்தப் பணியானது ரூ.350.65 கோடி மதிப்பீட்டில் 11 உயிரி அகழ்ந்தெடுக்கும் மையங்களின் மூலம் செயல்பட்டு வருகிறது.

இத்திட்டப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்த கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர் டாக்டர் ஜெ.இராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் பணிகளை குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் விரைந்து முடித்திட வேண்டுமென ஒப்பந்ததாரர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் அவர்கள் பெருங்குடி குப்பைக் கொட்டும் வளாகத்தில் செயல்பட்டு வரும் தேங்காய் ஓடுகள் மற்றும் தோட்டக் கழிவுகளை மறுசுழற்சி செய்யும் இயந்திரத்தின் செயல்பாட்டினையும், கட்டுமானம் மற்றும் கட்டட இடிபாட்டுக் கழிவுகளை பிரித்தெடுக்கும் நிலையத்தின் செயல்பாட்டினையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றிய இளைஞர் அணி சார்பில் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் நசரத்பேட்டை பஜார் பகுதியில் ஒன்றிய கழக செயலாளர் ப.ச.கமலேஷ் தலைமையில் பொதுக்குழு உறுப்பினர் எம்.முத்தமிழ் செல்வன் வரவேற்பில் நடைபெற்றது. இதில் மாவட்டக் கழகச் செயலாளர் ஆவடி சாமு.நாசர், தமிழ்நாடு அரசு கொறடா கோவி.செழியன், அரசின் சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றினார்கள். உடன் சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில மாவட்ட நிர்வாகிகள் பிரபு கஜேந்திரன், சி.ஜெரால்டு, ம.இராஜி, காயத்திரி ஸ்ரீதர், வி.குமார், காஞ்சனா சுதாகர், ஜி.ராஜேந்திரன், ஜி.நாராயணபிரசாத், டி.அண்ணாமலை, ஏ.ஜனார்த்தனன், எம்.இளையான், எஸ்.புகழேந்தி, ஏ.ஆர். பாஸ்கர், சுமதிகுமார், ஆர்.பிரபாகரன், வி.பி.பிரகாஷ்,மாவட்ட கவுன்சிலர் ஏஜி.ரவி, நிர்வாகி கள் கே.ஜி.ஆர்.ஸ்டாலின், கே.பி.ஞானமூர்த்தி, எஸ்.ராஜாராம், எம்.ராம்பாபு, பிரியா செல்வம், வி.தணிகாசலம், டி.துரைமுருகன், சண்முகம், தாஸ், லிங்கேஷ், கேசவன், திருமலைராஜ், சுரேஷ், பாலா, உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# திராவிடத்தின் கவசம்நீ!



காலத்தின் அருட்கொடையே! திராவி டத்தின்
கவசம்நீ! ஆரியத்தின் கலக்க மும்நீ!
மூலத்தை, உலகமொழிக் கெல்லாம் மூத்த
முதன்மொழியைத் தாய்த்தமிழைத் தலைமேற் கொண்டு
கோலச்செந் தமிழ்ச்செங்கோல் செலுத்து கின்றாய்!
கோட்டையினை நேர்க்கோட்டில் நடத்து கின்றாய்!
“ஞாலத்தின் மகத்தான தலைவன்” என்றே
நாட்டுக்குள்மாற்றாரும் போற்று கின்றார்!

பூவேறு மணம்வேறா? தலைவா! உன்றன்
புகழ்வேறு செயல்வேறா? கதிர்ப்பி ழம்பின்
தீவேறு கனல்வேறா? அடைபி ழிந்த
தேன்வேறு சுவைவேறா? சங்க காலப்
பாவேறு பொருள்வேறா? இலட்சி யப்போர்ப்
படைவேறு தொண்டர்களின் பாசம் வேறா?
நீவேறு கலைஞர்,அண்ணா, பெரியார் வேறா?
நீதானே தமிழ்நாட்டின் சேகு வேரா!

சேமிக்கும் சினம்தானே பொறுமை யாகும்!
சேகரிக்கும் அனுபவே ஞானம் ஆகும்!
மாமன்னன் அல்ல,மக்கள் தலைவா! உன்றன்
மாண்புயர்ந்து மிளிர்கிறது! பரிணா மத்தால்!
பூமிக்கும் உனக்கும்தான் சுழற்சிப் போட்டி!
புகழில்அந்த வானுக்கும் உனக்கும் போட்டி!
சாமிக்கும் உனக்கும்தான் கருணைப் போட்டி!
சாமான்யன் குடிசையில்உன் கனிவுப் பார்வை!

அறம்உன்றன் கருவூலம்! மனித நேய
அன்பேஉன் அடையாளம்! செருக்க ளத்தின்
மறம்,மானம் இவையேஉன் குருதி நாளம்!
மாநகரை ஆண்டாய்!மா நிலம்ஆள் கின்றாய்!
குறுகுறு நடைபயின்று பள்ளி செல்லும்
குழந்தைகளைக் கவனித்தாய்! அவர்கட் கான
உறுபசியை உள்நினைந்தாய்! உடனே காலை
உணவுக்கு வழிவகுத்தாய்! நீயே ஆண்தாய்!

நுண்கிருமி நோய்த்தொற்றால் உலகப் பந்தே
நொறுங்கிப்போய் கலங்கிக்கொண் டிருந்த நேரம்
கண்ணெடுத்தும் பார்க்கஅஞ்சி உறவுக் கூட்டம்
கதவுகளைச் சாத்திக்கொண் டிருந்த நேரம்
திண்மனமும் தண்குணமும் ஒருங்கு சேர,
சிகிச்சைபெற்ற நோயாளர் அறைக்குள் ளேபோய்
மண்மீதில் நலம்கேட்ட ஒரேத லைவன்!
மற்றொருவர் எவர்உன்போல் வைய கத்தில்?

தாத்தாவின் பெயர்விளங்கும் பேர னாகித்
தந்தைக்கும் புகழ்வழங்கும் வீர னாகி
மூத்தோர்தம் வழிசென்று, வென்று, நின்று
“முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்” ஆகிக்
காத்தருளும் இறைமாட்சி முதல்வ ராகிக்
கண்ணியத்தாய்க் குலத்துக்கே புதல்வ ராகிப்
பூத்தொளிரும் குறிஞ்சிமலர் போல்மி ளிர்ந்துப்
பொலிகின்றாய் எழில்கொண்டு பொதுத்தொண் டாலே!

தரவுகளின் தகைமையினால் நிமிர்ந்து நிற்கும்
தமிழ்நாட்டு வீதிகளில், சனாத னத்தை
விரவிவிட நிரவிவிடத் துடிப்பா ராகில்
வெறுங்கனவுப் புரவியின்மேல் ஏறிச் சென்று
தரைகவிழக் குப்புறத்தான் வீழ்ந்து போவார்!
தன்மானத் தமிழ்க்குருதிச் சூட்டில், உன்றன்
அரசியங்கும்! பெரியாரே உனக்குள் வாழ்வார்!
அண்ணாவும் கலைஞரும்தான் எம்மை ஆள்வார்!

சீர்திருத்தச் சமர்புரிந்த நடேசர்! நாயர்!
செயற்கரிய செய்துயர்ந்த தியாக ராயர்!
பார்திருந்த முழக்கமிட்ட அயோத்தி தாசர்!
பாட்டாளித் தோழர்சிங் கார வேலர்!
போர்த்தடத்தின் அடிச்சுவட்டில் உனது கால்கள்!
“பொதுமை”விதி! அதுவேஉன் சமூக நீதி!
வேர்கிளைத்துக் குலுங்கட்டும் புரட்சிப் பூக்கள்!
விரல்நீட்டு! வினைமுடிக்கும் இளைஞர் தோள்கள்!



கவிச்சுடர்
**கவிதைப்பித்தன்**